# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி
## பொதுத்தேர்வு
## 2022
## வளர்தமிழ் 7

சுட்டெண்:

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. இயற்றுவார் என்பது

அ ) இறந்தகாலம் ☐ ஆ ) நிகழ்காலம் ☐

இ ) எதிர்காலம் ☐ ஈ ) முக்காலம் ☐

2. கணவனைப் பிரிந்திருந்த காலத்தில் விருந்தோம்பலைச் செய்ய முடியவில்லையே என வருந்தியவர்

அ ) கண்ணகி ☐ ஆ ) வேண்மாள் ☐

இ ) மாதரி ☐ ஈ ) ஐயை ☐

3. உறக்கம் என்பதன் எதிர்ச்சொல்

அ ) உயர்வு ☐ ஆ ) தாழ்வு ☐

இ ) விழிப்பு ☐ ஈ ) தெளிவு ☐

4. சினங்காத்தல் பற்றிக் கூறும் திருக்குறளின் அதிகாரம்

அ ) விருந்தோம்பல் ☐ ஆ ) வெகுளாமை ☐

இ ) நட்பு ☐ ஈ ) வாய்மை ☐

5. அழகன் என்பதன் எதிர்ப்பாற்சொல்

அ ) அரசி ☐ ஆ ) தலைவி ☐

இ ) அழகி ☐ ஈ ) கிழவி ☐

6. விபுலாநந்த அடிகள் ஏழை மாணவருக்குத் தங்ககமும் உணவும் வழங்கினார். இதில் தங்ககம் என்பது

அ ) நூல் ☐ ஆ ) உணவு ☐

இ ) உடை ☐ ஈ ) தங்குமிடம் ☐

7. அறிந்து என்பது

அ ) பெயரெச்சம் ☐ ஆ ) வினையெச்சம் ☐

இ ) வினைமுற்று ☐ ஈ ) இடைநிலை ☐

8. குரங்குகள் பலாக்கனியைப் பறிப்பதைக் கண்டவர்

அ ) மீனவர் ☐ ஆ ) உழவர் ☐

இ ) புலவர் ☐ ஈ ) குயவர் ☐

9. ஏவற் சொல்லியத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) வன்னியில் தமிழர் வாழ்ந்தனர். ☐

ஆ ) பாவேந்தர் எங்கே பிறந்தார்? ☐

இ ) என்றும் உண்மையே பேசு! ☐

ஈ ) ஆகா! எவ்வளவு பசுமையான வயல்கள். ☐

10. பின்வருவனவற்றுள் வேறுபட்ட இசைக்கருவி

அ ) முரசு ☐ ஆ ) பறை ☐

இ ) தண்ணுமை ☐ ஈ ) வயலின் ☐

11. சொல்லின் முதலில் நின்று வினாப்பொருளைத் தரும் வினா எழுத்து

அ ) எ ☐ ஆ ) ஆ ☐

இ ) ஓ ☐ ஈ ) இ ☐

12. விரும்பினால் இல்லாதவனும் ஈயலாம் என்ற கருத்தை விளக்கும் பழமொழி

அ ) அக்கரைமாட்டுக்கு இக்கரை பச்சை. ☐

ஆ ) மனமுண்டானால் இடமுண்டு. ☐

இ ) அடாது செய்தவர் படாதுபடுவர். ☐

ஈ ) வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும். ☐

13. கு என்ற உருபு

அ ) 3 ஆம் வேற்றுமை ☐ ஆ ) 2 ஆம் வேற்றுமை ☐

இ ) 4 ஆம் வேற்றுமை ☐ ஈ ) 6 ஆம் வேற்றுமை ☐

14. ____________ ஆட்சிக் காலத்தில் அநுராதபுரத்துக்குத் தெற்கே முப்பத்திரண்டு தமிழ்ச் சிற்றரசுகள் நிலவின.

அ ) சூரத்தீசன் ☐ ஆ ) மாகன் ☐

இ ) அசேலன் ☐ ஈ ) எல்லாளன் ☐

15. நின்றான் என்ற சொல்லின் இடைநிலை

அ ) நில் ☐ ஆ ) றா ☐

இ ) ற் ☐ ஈ ) ஆன் ☐

16. பனை + ஓலை என்பதைப் புணர்த்தி எழுதினால்

அ ) பனைய்ஓலை ☐ ஆ ) பனைஓலை ☐

இ ) பனையோலை ☐ ஈ ) பனைவோலை ☐

17. செவிவழியாக மட்டும் உள்ளத்தைக் களிப்பூட்டும் கலை

அ ) நடனம் ☐ ஆ ) சிற்பம் ☐

இ ) ஓவியம் ☐ ஈ ) இசை ☐

18. எடு எனும் வினையடியின் வினைமுற்று

அ ) எடுத்த ☐ ஆ ) எடுத்து ☐

இ ) எடுத்தான் ☐ ஈ ) ஆன் ☐

19. வயலைக் குறிக்கும் சொல்

அ ) பழனம் ☐ ஆ ) மேதி ☐

இ ) பங்கம் ☐ ஈ ) துஞ்சு ☐

20. பணவரவு என்பது

அ ) இயல்புப்புணர்ச்சி ☐ ஆ ) கெடுதற்புணர்ச்சி ☐

இ ) திரிதற்புணர்ச்சி ☐ ஈ ) தோன்றற்புணர்ச்சி ☐

21. பூநகரிப் பகுதிகளில் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட ஆண்டு

அ ) 1980 - 1990 ☐ ஆ ) 1970 - 1971 ☐

இ ) 1989 - 1990 ☐ ஈ ) 1995 - 1996 ☐

22. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்

அ ) மகன் ☐ ஆ ) தகப்பன் ☐

இ ) தந்தை ☐ ஈ ) அப்பன் ☐

23. அவளுடன் என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

அ ) அவர்கள் + உடன் ☐ ஆ ) அதன் + உடன் ☐

இ ) அவள் + உடன் ☐ ஈ ) அவர் + உடன் ☐

24. பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்கு விடும் எனக் கூறியவர்

அ ) பாரதியார் ☐ ஆ ) ஔவையார் ☐

இ ) பாவேந்தர் ☐ ஈ ) வள்ளுவர் ☐

25. அவ்விடம் இச்சொல்லில் உள்ள சுட்டெழுத்து

அ ) இ ☐ ஆ ) உ ☐

இ ) ஏ ☐ ஈ ) அ ☐

26. தமிழில் நீர்நிலைகளைக் குறிக்கும் சொற்களில் ஒன்று

அ ) அம்பு ☐ ஆ ) பரிதி ☐

இ ) வாய்க்கால் ☐ ஈ ) மலர் ☐

27. குதிரை வண்டி கற்பாதையில் கடகட என்று சென்றது. இதில் கடகட என்பது

அ ) இரட்டைக்கிளவி ☐ ஆ ) அடுக்குத்தொடர் ☐

இ ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஈ ) இணைமொழி ☐

28. கத்தரித்தோட்டத்துக் காவலனின் பல்லுக்கு உவமையாகக் கூறப்பட்டது

அ ) கறைச்சிப்பி ☐ ஆ ) சங்கு ☐

இ ) ஊரி ☐ ஈ ) மட்டி ☐

29. பின்வருவனவற்றுள் குறில் எழுத்துகள்

அ ) ஆ,ஐ,ஏ,ஓ,ஔ ☐ ஆ ) அ,இ,உ,எ,ஒ ☐

இ ) ஆ,ஈ,ஊ,ஏ,ஐ ☐ ஈ ) அ,இ,ஊ,எ,ஒ ☐

30. ________ பண்ணிசை விழாவின் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினாய்.

அ ) நீங்கள் ☐ ஆ ) நீ ☐

இ ) நான் ☐ ஈ ) நாம் ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

மாந்த அறிவியலில் பேரழிவைத் தருவது அணுகுண்டு. அணுகுண்டு வீசப்பட்ட துன்ப நிகழ்வு நடந்து பல ஆண்டுகள் கடந்து விட்டன. யப்பான் நாட்டின் கிரோசிமா, நாகசாகி நகரங்கள் மீது அமெரிக்கா அணுகுண்டுகளை வீசியது. முதலாவது அணுகுண்டு 1945ஆம் ஆண்டு கிரோசிமா நகர் மீது வீசப்பட்டது. தொடர்ந்து நாகசாகி நகரத்தின் மீதும் அணுகுண்டு வீசப்பட்டது. இதனால், இரண்டு நகரங்களும் சாம்பல் மேடாக அழிந்து போயின. இரண்டு இலக்க மக்கள் கருகி இறந்தனர். புல், பூண்டுகள் கூட அணுகுண்டு வீசிய இடங்களில் முளைக்கவில்லை. வரலாறு காட்டும் கொடூர நிகழ்வுகளில் இதுவும் ஒன்றாக அமைகிறது. எனவே, உலகம் அறிவியலை அழிவுக்குப் பயன்படுத்தக்கூடாது.

1. அணுகுண்டுகளை வீசிய நாடு எது ?

______________________________

2. எத்தனையாம் ஆண்டு அணுகுண்டுகள் வீசப்பட்டன?

______________________________

3. எந்நகரங்கள் சாம்பல் மேடாக அழிந்து போயின?

______________________________

______________________________

4. உலகம் அறிவியலை எதற்குப் பயன்படுத்தக்கூடாது?

______________________________

5. மாந்த அறிவியலில் பேரழிவைத் தருவது எது?

______________________________

______________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. விபுலாநந்த அடிகளாரின் புகழுக்குக் காரணியமாக விளங்கிய நூல் எது?

_______________________________________________

2. சிலப்பதிகாரத்தின் முதன்மைக் கதை மாந்தருள் இருவரின் பெயர்களைத் தருக.

_______________________________________________

3. மோசிகீரனார் யாரைக் காண வந்தார்?

_______________________________________________

4. வன்னியில் பெரிய புளியங்குளத்தில் எத்தனை பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

_______________________________________________

_______________________________________________

5. மோசிகீரனாரது தலையைக் காத்தது எது?

_______________________________________________

_______________________________________________

6. "மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து..." என்ற அடியை எழுதியவர் யார்?

_______________________________________________

7. தாலாட்டுப்பாடல் யாரால் யாருக்குப் பாடப்படுகிறது?

_______________________________________________

_______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## முயற்சி

| | | | | |
|---|---|---|---|---|
| படிக்கும் | வெற்றியை | பெரிய | வழியில் | பார் |

கொக்கரக்கோ எனக் கோழிகள் உன்னைக்
கூவி எழுப்பும் பார்!
அக்கறையோடு அவை தத்தம் வழியில்
ஆற்றும் செயலைப் ______________!

சின்ன எறும்புகள் ______________ பூச்சியைச்
சேர்ந்தே இழுப்பதைப் பார்!
என்றும் ஒற்றுமை ______________ த் தந்திடும்
எறும்புகள் சொல்வதைக் கேள்!

சிறுவர் நீங்கள் ______________ போதினில்
சிதறாக் கவனமுடன்
அறிவைப் பெற்றிடும் ______________ முயன்றே
ஆற்றல் காட்டிடுவீர்!

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பன்மைச்சொல்லியங்களை ஒருமைச் சொல்லியங்களாக மாற்றி எழுதுக.

அ) பனிக்கரடிகள் பார்க்க அழகாக இருக்கின்றன.

______________________________________________

ஆ) நாங்கள் மோனலீசா ஓவியத்தை வரைந்தோம்.

______________________________________________

2. பின்வரும் சொல்லியத்தில் உள்ள வேற்றுமை, வேற்றுமை உருபு, வேற்றுமை உருபு ஏற்ற சொல் ஆகியவற்றை எழுதுக.

தாமரையைப் போன்றே அல்லியும் ஒரு நீர்ப்பூவாகும்.

| வேற்றுமை | வேற்றுமை உருபு | வேற்றுமை உருபு ஏற்ற சொல் |
|---|---|---|
| | | |

3. தரப்பட்டுள்ள உவமை அணியின் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றைத் தருக.

மலர் போன்ற கை

| உவமானம் | உவமேயம் | பொதுத்தன்மை |
|---|---|---|
| | | |

4. பின்வருவனவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

காலப்பெயர் ____________________

பலவின்பால் ____________________

இயல்புப்புணர்ச்சி ____________________

5. பின்வரும் சொற்களை வைத்துச் சொல்லியங்கள் எழுதுக.

நாடகம்

______________________________________________

பெற்றோர்

______________________________________________

புள்ளிகள் 15

6) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. ஆவினங்கள் கன்றுகளைத் தேடிக் ____________ .

( கதறின, கதரின )

2. நாம் நாள்தோறும் வைகறையில் துயில்விட்டு ____________ .

( எலுவோம், எழுவோம் )

3. பசித்தோருக்கு உணவு அளித்து ____________ தமிழரின் பண்பாடு.

( மகிள்தல், மகிழ்தல் )

4. மாந்தர் ____________ காத்தல் எனும் பண்பைப் பேண வேண்டும்.

( சினம், சிணம்)

5. எல்லாளன் ____________ வாயிலில் மணியொன்றைக் கட்டினான்.

( அரண்மனை, அரன்மனை )

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✱ விருந்தோம்பல்
- ✱ கயிலைவன்னியன்
- ✱ நீர் அறிந்த புலவர்
- ✱ கடலும் கடல்வாழ் உயிரிகளும்
    - ➢ கடல்வாழ் உயிரிகள்
    - ➢ கடல்வாழ் உயிரிகளால் கிடைக்கும் நன்மைகள்
    - ➢ கடலினால் கிடைக்கும் நன்மைகள், தீமைகள்
    - ➢ கடல் மாசுபடுதலும் அதனைத் தடுக்கும் வழிகளும்

புள்ளிகள் 20